



To

BOOK POST

If Undeliveried please return to ...

**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**

**Santhom Press, Diocese of Marthandam** Mob : +91 94-42-469852



# Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 02.01.2026 | Friday | 9.00 pm | Feast of Catholicos | Pattom |
| 04.01.2026 | Saturday | 8.00 am<br>4.30 pm | Feast Mass Thottupuram<br>Feast Mass | Pathanamthitta<br>Cheriyandu |
| 05.01.2026 | Monday | 4.00 pm | House Warming | Mariagiri |
| 06.01.2026 | Tuesday | 6.30 am | Holy Mass | Cathedral, Mtm |
| 07.01.2026 | Wednesday | 10.00 am | Appointment of New Principal - MCC | Mariagiri |
| 09.01.2026 | Friday | 10.00 am<br>4.00 am | School Day<br>School Day | Chellamkonam<br>Kirathoor |
| 10.01.2026 | Saturday | 6.00 am<br>9.00 am<br>5.00 pm | Holy Mass<br>Class to Lay Theology<br>Samathuva Pongal Celebration | Catholicate Centre, Pattom<br>Catholicate Centre<br>Kanyakumari |
| 11.01.2026 | Sunday | 9.00 am<br>4.00 pm<br>6.00 pm | Feast Mass<br>MCCL - Annual Day<br>Feast Mass | Keezhmancode<br>Pastoral Centre<br>Parvathipuram |
| 12.01.2026 | Monday | 9.30 am<br>4.00 pm | Marriage<br>Marriage | Vetturnimadam<br>Karungal |
| 13.01.2026 | Tuesday | 6.30 am<br>9.00 am | Holy Mass<br>Priests Seminor - Year of Liturgy | Dm-Convent, Mtm<br>Bishop's House |
| 14.01.2026 | Wednesday | 9.00 am<br>5.00 pm | Feast Mass<br>Solemn Declaration of Martyr Saint Devasahayam as patron saint of the Laity in India | Peruvilai Shrine<br>Aralvaimozhy Shrine |
| 15.01.2026 | Thursday | 5.00 pm | Feast Mass | Devathanapatti |
| 16.01.2026 | Friday | 10.00 am<br>6.00 pm | Catechism Children's Sangamam<br>Flag Hoisting - Homily | Mar Ephraem College, Elavuvilai<br>Madathattuvilai |
| 17.01.2026 | Saturday | 6.30 am | Commemoration Mass of Archbishop Cyril Mar Baselios | Pattom |
| 18.01.2026 | Sunday | 11.00 am | Convention | Coimbatore |
| 19.01.2026 | Monday | 10.00 am | Seminar on Nicene Council | Concordia - Nagercoil |
| 21.01.2026 | Wednesday | | TNBC Meet | Chennai |
| 23.01.2026 | Friday | 6.30 am | Holy Mass | Chengannur |
| 25.01.2026 | Sunday | 8.00 am | Holy Mass | Cherottukonam |
| 26.01.2026 | Monday | 10.00 am<br>12.00 pm | Catechism - Teacher's Meet<br>Angel's Day | Pastoral Centre<br>Mar Ephraem College, Elavuvilai |
| 27.01.2026 | Tuesday | | Labour Commission Meet | Thanjavoor |
| 29.01.2026 | Thursday | 4.00 pm | School Day | Ambilikonam |
| 30.01.2026 | Friday | 4.00 pm | School Day | Anakkarai |
| 31.01.2026 | Saturday | 10.00 am | Day of Religious | Bishop's House |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 23 ஜனவரி 2026 இதழ். 01

**Patron**
*His Excellency*
*Most Rev. Vincent Mar Paulos*

**Editor**
*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

**Cover Design**
*Mrs. Uni Kumari B.*

**Printing**
*Santhom Press,*
*Marthandam*

**Published By**
*The Chancellor*
*Diocese of Marthandam*




மலர். 22 டிசம்பர் 2025 இதழ். 12

**Address :**
Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165
E-mail:mardiobulletin@gmail.com



# The Malankara Syrian Catholic Church
# Bulletin of the
# Diocese of Marthandam




மலர்.23 ஜனவரி 2026 இதழ்.01

**முக்கியமான நாட்கள்**

ஜனவரி 2026

- 01 புத்தாண்டு தினம்
- 07 ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்துமஸ்
- 12 தேசிய இளைஞர் தினம்
- 15 பொங்கல்
- 15 இந்திய ராணுவ தினம்
- 23 தேசிய கையெழுத்து தினம்
- 24 தேசிய பெண்குழந்தை தினம்
- 25 தேசிய சுற்றுலா தினம்
- 26 குடியரசு தினம்

## உள்ளடக்கம்

1. Circular 03
2. மேய்ப்புப்பணி அறிவுரைக்குழு கூடுகை 11
3. குருக்களின் தியானம் மற்றும் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் 12
4. உபதேசிமார்களுக்கான கூடுகை 12
5. MIDS 13
6. MCA 17
7. புனித வின்செண்ட் தே பவுல் சபை 18
8. திருமண ஆயத்தப்பயிற்சி 20
9. மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி, கிராத்தூர் 21
10. மறைவட்ட செய்திகள் 22
11. பெயர்விழா நல்வாழ்த்துகள் 24
12. ஆயரின் டிசம்பர் மாத நிகழ்வுகள் 25
13. இம்மாதம் நினைவு கூர 27
14. Bishop's Diary 28

*Printed by*
Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852



# மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபை
# விவிலிய ஞாயிறு 2025

## சுற்றறிக்கை

மதிப்பிற்குரிய ஆயர்களே, கோர் எப்பிஸ்கோப்பாமார்களே, ரம்பான்மார்களே, குருக்களே, துறவிகளே, இறையேசுவில் அன்புமிக்க சகோதர சகோதிரிகளே,

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும் அமைதியும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக. நமது திருச்சபையானது 21-12-2025 அன்று விவிலிய ஞாயிறை கொண்டாடுகிறது. மறைநூல் வாயிலாக வெளிப்படுத்தப்பட்ட இறைவார்த்தையை இதயத்தில் உள்வாங்கு வதற்காகவும் அந்த தெய்வீக மறையுண்மைகளை தியானம் செய்வதற்காகவும் இந்த நாள் சமர்பணம் செய்யப்பட்டிருக்கிறது.

எழுதப்பட்ட வார்த்தையின் மீதுள்ள நமது அன்பை புதிதாக்கம் செய்யவும், விவிலிய நூல்கள் வாயிலாக நம்மோடு பேசும் கடவுளின் குரலை கவனமாக கேட்பதற்கும், வார்த்தைக்கு கீழ்படிந்து வாழவும், இறைவார்த்தை தரும் மீட்பின் செய்தியை துணிவுடன் முழக்கமிட்டு அறிவிக்கவும் இறைமக்களாகிய நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். திருத்தூதர்கள் வாயிலாக மரபு செல்வமாக நமக்கு கிடைத்த புனிதமான இத்திருநூல்கள் திருச்சபையை ஆற்றல்படுத்தி புதிதாக்கம் செய்கின்றன. மறைநூல் திருச்சபையை புதிதாக்கும் உயிரூற்றாக திகழ்கிறது. பிரிவுகளும் பிளவுகளும் ஆன்மீகத் தளர்ச்சியும் நிறைந்து காணப்படும் இக்காலத்தில் இறைவார்த்தை எதிர்நோக்கின் நங்கூரமாகவும், பயணம் செய்யும் திருச்சபைக்கு வழிகாட்டியாகவும், நம் வாழ்வின் பாதைக்கு ஒளியாகவும் இருந்து, நம்மை வழிநடத்துகிறது (திபா 119:105). கடவுளின் வார்த்தை கிறிஸ்தவ வாழ்வின் மையமாக மாற வேண்டும். இந்த உட்தூண்டுதலை உள்வாங்கிய மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபை, சபை மக்களையும் குருக்களையும் இறைவார்த்தையில் மூழ்கி பயணிக்க அழைக்கிறது.

## 1. திருவிவிலியம் : ஆண்டவரை சந்திக்கும் தளம் :

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை கடவுளின் வார்த்தையாக தூய யோவான் குறிப்பிட்டு நற்செய்தியை தொடங்குகிறார். "வாக்கு மனுவுருவானார் , நம்மிடையே குடிகொண்டார்" (யோவா 1:14). வாக்காம் இறைவன் மனிதனை சந்திக்க மனித இயல்பை ஏற்றார். அதுவழியாக நிறைவாழ்வுக்கு நம்மை அழைக்கிறார். திருவிவிலியத்தின் ஒவ்வொரு பக்கங்களும் வருணிக்க முடியாத மறையுண்மைகளுக்கு சான்று பகிர்கின்றன. இந்நூல்கள் அனைத்தும் கிறிஸ்துவில் மையம் கொண்டிருக்கின்றன. "மறைநூல் வழியாக நிலைவாழ்வு கிடைக்குமென எண்ணி அதனைத் துருவித் துருவி ஆய்ந்து பார்கிறீர்களே; அம்மறைநூலும் எனக்கு சான்று பகர்கிறது (யோவா 15:39). திருஅவையின் வாழ்வும் அருள்அடையாளங்களும் திருநூல்களும் மனிதராதல் மறைபொருளிலிருந்து (Mystery of Incomation) ஊற்றெடுக்கிறது. இவ்வாறு ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் திருவிவிலியத்தின் நூல்கள் கிறிஸ்துவை சந்திக்கும் தளங்களாக உள்ளன. கடவுளின் இந்த அன்புக் கடிதங்களை தொடர்ந்து வாசிக்கும் போது இயேசுவைப் பற்றிய அறிவை (பிலி 3:8) ஒப்பற்ற செல்வமாக பெற்றுக்கொள்ள திருச்சபை நம்மை அழைக்கிறது. "திருவிவிலியத்தை அறியாதோர் கிறிஸ்துவை அறிவதில்லை" (புனித ஜெறோம்). எனவே திருவிவிலியத்தை தியான வாசிப்பு செய்வது வழியாக இயேசு கிறிஸ்துவை ஆழத்தில் அறிகிறோம். இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம், திருவிவிலியத்தை வாசித்து ஆண்டவரை அறிந்து வாழ உத்வேகம் தருகின்றது. திருநூலில் வேரூன்றிய திருவழிபாடு வாயிலாகவோ, தியான வாசிப்பு வாயிலாகவோ, ஒவ்வொருவருடைய அழைப்புக்கு ஏற்ற வழிகாட்டுதல் வாயிலாகவோ, திருவிவிலியத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க வேண்டும். (Dei Verbum 25).

ஆண்டவரை அறியவும் அவரை பின்பற்றவும் அனுதின வாழ்வில் அவருக்கு சான்று பகிரவும் இறைவார்த்தையை வாழவும் நம்மையே தகவமைத்துக் கொள்ள வேண்டும். நம்பிக்கையோடு நாம் திருவிவிலியத்தை திறக்கும் போது கிறிஸ்து இயேசு நம்மோடு பேசுகிறார். எம்மாவூசுக்கு சென்ற சீடருடன் அவர்கள் அறியாமல் அவர்களோடு வழிநடந்தது போல இயேசு நம்மோடு நடந்து வருகிறார் (லூக் 24:27). மறைநூலை புரிந்து கொள்ளும் வண்ணம் நமது மனக்கண்கள் திறக்கப்படுகின்றன (லூக் 24:45). இறைவார்த்தைகள் வார்த்தைகள் மட்டுமல்ல, இறைவார்த்தைகள் கிறிஸ்துவில் வெளிப்பட்ட இறையன்பின் சாட்சியங்கள். திருவிவிலியத்தை நேசிப்பது கிறிஸ்துவை நேசிப்பதற்கு சமம். பக்தியுடன் அதனை வாசிப்பது கடவுளுடன் நடத்தும் தனிப்பட்ட சந்திப்பு. இதனால் நமது இதயத்தையும் மனதையும் ஆண்டவரே உருவாக்கம் செய்கிறார்.

## 2. திருவிவிலியம் : திருச்சபை வாழ்வின் அடித்தளம்

திருச்சபை வாழ்வின் அடித்தளம் இறைவார்த்தையே. அதிலிருந்து நமது நம்பிக்கையும் பணியும் பரிசுத்தமும் ஒழுகி வருகின்றன. அது நமது நம்பிக்கையின் அடித்தளம். ஏனெனில் அறிவிப்பதை கேட்டால்தான் நம்பிக்கை உண்டாகும். கிறிஸ்துவைப் பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டால்தான் அதை கேட்க வாய்ப்புண்டு (உரோ 10:17). நமது பணியின் அடிப்படையும் இதுவே. ஏனெனில் நம் ஆண்டவர் இயேசு உலகெங்கும் சென்று எல்லா மக்களினத்தாரையும் சீடராக்கவும் அவர் கட்டளையிட்ட யாவற்றையும் கடைபிடிக்கும்படி கற்பிக்கவும் கட்டளையிட்டார் (மத் 28:19-20). இது நமது பரிசுத்தத்தின் அடித்தளம். ஏனெனில் உண்மையினால் அவர்களை உமக்கு அற்பணமாக்கி யருளும், உமது வார்த்தையே உண்மை என்று இயேசு தந்தையை வேண்டினார் (யோவா 17:17).

இறைவார்த்தை இல்லாத திருச்சபை திசைமாறிப் போகும். துணிவை இழந்துவிடும். இறைவார்த்தையின் ஆற்றல் திருச்சபையை புதிதாக்கம் செய்யும். நற்செய்தி அறிவிக்கும் சபையாக மாற்றும். ஒளியாம் கிறிஸ்துவை ஒவ்வொரு தலைமுறையினருக்கும்

பகிர்ந்தளிக்கும். அன்பாலும் தெய்வீக உண்மையாலும் நம்பிக்கையாளர்களை உற்சாகப்படுத்தி உருமாற்றம் அடையச் செய்யும்.

### 3. திருவிவிலியமும் பங்கு தளமும்

திருச்சபையின் உயிரோட்டமுள்ள இதயமே பங்கு. நம்பிக்கையாளர்கள் ஒரு குடும்பமாக கூடும் இடம். இங்குதான் இறைவார்த்தை அறிவிக்கப்பட்டு, கொண்டாடப்பட்டு, வாழ்வாக்கப் படுகிறது. "பங்கு இறைவார்த்தையின் இல்லமாக மாற வேண்டும், என்கிறார் திருத்தந்தை 16-ம் பெனடிக்ட் (Verbum Domini). ஒவ்வொரு திருவழிபாட்டு நிகழ்விலும் இறைவார்த்தை பக்தியுடன் அறிவிக்கப்பட வேண்டும். இது நம்பிக்கையாளர்களின் இதயங்களை ஒளிரச் செய்து மீட்பின் மறையுண்மைகளுக்குள் அழைத்துச் செல்கிறது. மறையுரைகளும் மறைக்கல்வியும் இறைவார்த்தையில் வேரூன்றியதாக இருக்க வேண்டும். இவை நம்பிக்கையாளர்களுக்கு புனித வாழ்வுக்கான உத்வேகத்தை தந்து, கிறிஸ்துவின் போதனைகளை வாழ்வாக்க உட்தூண்டுதல் அளிக்கும்.

இறைவார்த்தை திருவழிபாட்டு நிகழ்வைக் கடந்து இறைசமூகத்தின் வாழ்வில் ஊடுருவிச் செல்ல வேண்டும். விவிலியக் கல்வி இறைச்சமூகத்தின் எல்லா துறைகளிலும் ஒரு விடயமாக காணப்பட வேண்டும். பங்கு நிகழ்வுகள், இளையோர் கூட்டங்கள், அருள்வாழ்வியக் கூட்டங்கள் போன்றவற்றில் நம்பிக்கையாளர்கள் இறைவார்த்தை வாயிலாக இறைவனை சந்திக்க வழிவகுக்க வேண்டும். இது அவர்களுக்கு இறைஞானத்தை தியானம் செய்யவும், கிறிஸ்தவ வாழ்வை உருவாக்கம் செய்யவும் உதவுகிறது. இறைவேண்டல் மனநிலையில் இறைவார்த்தையை வாசித்து தியானம் செய்து தோழமைக் கூட்டங்களில் பகிர்ந்து வாழும் ஒரு வாழ்க்கைப்பாணி ஒவ்வொரு பங்கிலும் உருவாக வேண்டும். இது வழியாக இறைமக்கள் இறைவார்த்தையின் புதிதாக்கம் செய்யும் ஆற்றலை அனுபவமாக்கிக் கொள்வர்.



எல்லா நற்செய்திப்பணிகளும், தியானங்களும் இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும். நற்செய்தி தியானப் பொருளாக மாற வேண்டும். மேலும் அது கொண்டாடப்பட்டு சான்று பகிர்ந்து வாழ்வாக்கப்பட வேண்டும். திருமறை நூலே நற்செய்திப் பணியின் ஊற்று. இந்த கருத்துக்களை திருத்தந்தை பிரான்சிஸ் 'நற்செய்தியின் மகிழ்ச்சி' என்னும் திருமடலில் வலியுறுத்தி கூறியுள்ளார் (EG 124).

### 4. குடும்பம் - திருவிவிலியத்தின் முதல் பள்ளிக்கூடம்

குடும்பம் குட்டித் திருச்சபையாகவும், திருச்சபையின் அடிப்படை அலகாகவும் உள்ளது. இறைவார்த்தைக்கு மதிப்பளித்து வாசித்து தியானித்து வாழ்வாக்கம் செய்கின்ற ஒரு புனித இடமே குடும்பம். இது இறைவார்த்தையின் பாடசாலையாக உள்ளது. இறைவார்த்தையை தங்கள் பிள்ளைகளுக்கு விளக்கிச் சொல்லும் கடமை பெற்றோர்களுக்கு உண்டு.

மோசே இஸ்ராயேல் மக்களுக்கு வழங்கிய அறிவுரை இங்கே குறிப்பிடதக்கது. "இன்று நான் உனக்குக் கட்டளையிடும் இவ்வார்த்தைகள் உன் உள்ளத்தில் இருக்கட்டும். நீ அவற்றை உன் பிள்ளைகளின் உள்ளத்தில் பதியுமாறு சொல். உன் வீட்டில் இருக்கும்போதும், உன் வழிப்பயணத்தின்போதும், நீ படுக்கும்போது, எழும்போதும் அவற்றைப் பற்றிப் பேசு" (இணை சட்டம் 6:6-7). அவ்வாறே கடவுளை அறிந்த பெற்றோர்கள் தங்கள் நம்பிக்கையை பிள்ளைகளுக்கு ஊட்டி வளர்க்க வேண்டியது அவர்களது கடமை. திருப்பாடல் 78 இதனை வலியுறுத்துகிறது. "யாக்கோபுக்கென அவர் நியமங்களை வகுத்தார்; இஸ்ரயேலுக்கெனத் திருச்சட்டத்தை ஏற்படுத்தினார்; இதனையே தம் பிள்ளைகளுக்கும் கற்பிக்குமாறு நம் மூதாதையர்க்கு அவர் கட்டளையிட்டார். வரவிருக்கும் தலைமுறையினர் இவற்றை அறிந்திடவும், இனிப் பிறக்கவிருக்கும் பிள்ளைகள் இவர்கள் தம் புதல்வர்களுக்கு ஆர்வத்துடன்

கற்றுக்கொடுக்கவும், அதனால், அவர்கள் கடவுள் மீது நம்பிக்கை வைக்கவும், இறைவனின் செயல்களை மறவாதிருக்கவும், அவர்தம் கட்டளைகளைக் கடைப்பிடிக்கவும்" (திரு பா 78:5-7).

இறைவார்த்தையில் வேரூன்றி வளரும் ஒரு குடும்பம் கருத்துவேற்றுமை, தவறான புரிதல்கள், சந்தேக மனப்பாங்குகள், அச்சம் போன்றவற்றிக்கு எதிராக போராட வலிமை பெறுகின்றது. இறைவேண்டல் மனநிலையில் இறைவார்த்தையை வாசித்து தியானிக்கும் போது நமது குடும்பங்கள் சீடத்துவ பயிற்சியகமாக மாறுகின்றன. குடும்பம் இறையன்புக்கு சான்று பகிர்ந்து, நம்பிக்கையை புதிய தலைமுறைக்கு பகிர்ந்து, ஆண்டவருக்கு கீழ்படிந்து அவருக்கு பணிவிடை செய்ய இதயங்களை உருவாக்கியெடுக்கும் பயிற்சித்தளமாக உருமாறுகின்றன.

### 5. இறைவார்த்தை : உருமாற்றத்தை உளவாக்கும் ஆற்றல்

இறைவார்த்தையின் உருமாற்றம் செய்யும் ஆற்றல் வியப்புக்குரியது. அது பாவிகளை மனம்திரும்பச் செய்கிறது. வேதனையில் இருப்பவர்களுக்கு ஆறுதல் தருகிறது. உலக இன்பங்களை உதறித்தள்ளி புனித வாழ்வுக்குத் திரும்ப உட்தூண்டுதல் தருகிறது. இறைவார்த்தை இறைவனின் விருப்பத்தை செயல்படுத்துகிறது. அது வெறுமையாய் திரும்பி வருவதில்லை (எசா 55:11). நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதை 100 மடங்காகவும், 60 மடங்காகவும், 30 மடங்காகவும் பயனளிக்கிறது (மத் 13:23). இறைவார்த்தை நம்பிக்கையுடன் வாசிப்பவர்களுக்கும் அதனை கேட்பவர்களுக்கும் வாழ்வு தருகிறது. அது பாவிகளை மனம் திரும்பச் செய்கிறது. காயப்பட்டவர்களை குணப்படுத்துகிறது. மனத்தளர்ச்சியில் இருப்பவர்களுக்கு பலன் தருகிறது. மனசஞ்சலத்தில் இருப்பவர்களை திடப்படுத்துகிறது. அநீதியை கண்டனம் செய்கிறது.

இறைவார்த்தையில் நாம் மூழ்கினால் நமது இதயங்கள் இயேசுவின் இதயத்தோடு இணைந்து விடுகிறது. இவ்வாறு இறைவார்த்தை தனிநபர்களையும், குடும்பங்களையும் உருமாற்றம் செய்கிறது.



### 6. எல்லோருக்கும் திருவிவிலியம் : விவிலிய பணிக்குழுவின் பணி

திருவிவிலியத்தில் ஆண்டவரை சந்தித்து அவரது வார்த்தைகளால் மாற்றமடைந்தவர்கள் இந்த வாழ்வுதரும் நற்செய்தியை குடும்பங்களிலும், பங்கு தளங்களிலும் மனித வாழ்வின் பல்வேறு துறைகளிலும் பகிர்ந்தளிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். இதுவே விவிலியப் பணிக்குழுவின் கடமை. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினை இங்கே குறிப்பிடத்தக்கது. திருவிவிலியம் எல்லோருக்கும் கிடைக்கிறது என்பதை உறுதிப்படுத்த வேண்டியது திருச்சபையின் கடமை. எனவேதான் பல்வேறு மொழிகளுக்கு திருவிவிலியம் மொழிமாற்றம் செய்யப்படுகிறது. இறைவார்த்தையை பக்தி பற்றுதலுடன் பாதுகாத்து பகிர்ந்து வருகிறது (Dei Verbum 22). எனவே இறைவார்த்தை வாசித்தல், தியானம் செய்தல், கற்றல் போன்றவற்றிக்கு கிறிஸ்தவ நம்பிக்கையை ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவரும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். கற்பது மட்டுமல்ல கற்றதை கற்பிப்பதும், சான்று பகர்வதும் நம்மை இறைவார்த்தையின் திருப்பணியாளர்களாக மாற்றுகிறது.

### நிறைவு

மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபை கடந்த ஆண்டில் திருவிவிலியத்தில் மூழ்கி திருச்சபை சமூகத்தை புதிதாக்கம் செய்ய எடுத்துக் கொண்ட முயற்சி நம் அனைவருக்கும் தெரிந்ததே. இறைவார்த்தை ஆண்டின் எண்ணங்களும், செயல்பாடுகளும் தொடரட்டும். மேலும் அது ஓர் ஒளியாக எங்கும் ஒளிரட்டும். இறைவார்த்தையை அனுதின மன்னாவாக உண்போம். இறைவார்த்தை ஆண்டில் உருவான பேரார்வம் தொடர்ந்து நம்மை வழிநடத்தட்டும். மனுவுருவான வாக்கு நம்மிடையே குடிகொண்டுள்ளது. இந்த வாக்கின் வல்லமையைக் குறித்து தியானம் செய்து புதுமுயற்சி பெறுவோம். நம்மையே இறைவார்த்தைக்கு அர்ப்பணம் செய்வோம். கடவுளின் திருவுளத்தின்படி வாழவும், உண்மைக்கு சான்று பகிரவும், மறைநூல் உருவாக உழைத்த

உள்ளங்களுக்கு உட்தூண்டுதல் வழங்கிய தூய ஆவியார் நமது உள்ளங்களை ஒளிரச் செய்து இதயங்களை பற்றியெரியச் செய்யட்டும். இறைவார்த்தை உங்கள் வாழ்வின் பாதைகளுக்கு ஒளியாக மாறி நம்பிக்கையை வலுப்படுத்தி குருமடங்களையும், பங்கு சமூகத்தையும்,

விவிலிய பணிக்குழு மேற்கொள்ளும் முயற்சிகளையும் முன்னின்று வழிநடத்தட்டும்.

இறையன்னையாகிய தூய மரியா, திருத்தூதர் பவுல், புனித ஜெறோம் இவர்களின் பரிந்துரை இறைவார்த்தை கற்பதற்கும், தியானம் செய்வதற்கும் முழக்கமிட்டு அறிவிப்பதற்கும் நமக்கு உதவட்டும்.

விவிலிய ஞாயிறு அருளின் நாளாக மாறட்டும். இறைவார்த்தைக்கு பணிவுடன் செவிமடுப்போம். ஆர்வமுடன் தியானம் செய்வோம். மனதை பண்படுத்துவோம். இதயங்களை புனிதப்படுத்துவோம். நமது பாதச் சுவடுகளை வழிநடத்த மனுவுருவான வார்த்தையை இதயம் திறந்து இரு கரம் நீட்டி வரவேற்போம். அதற்கு மூவொரு இறைவன் நம்மை தயாரிப்பாராக.

† மேதகு **ஆபிரகாம் மார் யூலியோஸ்**
ஆயர் மாமன்ற விவிலியப் பணிக்குழு தலைவர்

10-12-2025
காதோலிக்கேட் மையம்
பட்டம், திருவனந்தபுரம்.



# மேய்ப்புப்பணி அறிவுரைக்குழு கூடுகை

மார்த்தாண்டம் மறைமாவட்ட மேய்ப்புப்பணி அறிவுரைக்குழு கூட்டம் 27.12.2025 அன்று காலை 9.30 மணிக்கு ஆயர் இல்ல அரங்கத்தில் வைத்து மேதகு ஆயர் Dr. வின்செண்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மறைமாவட்ட செயலர் பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்கள் அனைவரையும் வாழ்த்தி வரவேற்றார்கள். செயலர் திரு. M. அருள்தாஸ் அவர்களால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. நமது மறைமாவட்டத்தில் செயல்படும் 16 பணிக் குழுக்களின் செயல்பாடுகள் திட்டங்கள் குறித்த அறிக்கைகள் பணிக்குழுக்களின் ஆன்மீக இயக்குநர்கள் பதிவு செய்தனர்.

மேய்ப்புப்பணி அறிவுரைக்குழு உறுப்பினர்கள் கலந்துரையாடல் நிகழ்வின் போது, மேதகு ஆயர் அவர்கள், Nursing படித்த நமது பிள்ளைகள் St. Pauls Educational Accadamy-ல் சேர்ந்து, German Language படிக்க முயற்சிகள் செய்ய வேண்டும் எனவும், Mar Ephraem Engineering College, Autonomous ஆக தரம் உயர்ந்துள்ளது எனவும், B.Sc., Nursing College தொடங்க முயற்சிகள் நடைபெறுகிறது. எனவும், மறைமாவட்ட வளர்ச்சி பணிகள், பேராலய கட்டுமான பணிகளில் இறைமக்களின் பங்கேற்பு தேவை எனவும் விளக்கி கூறினார்கள். மறைமாவட்ட முதன்மை குரு Msgr. ஜோஸ் பிறைட் அவர்கள் மறைமாவட்ட வளர்ச்சி பணிகளின் மேய்ப்பு பணி அறிவுரைக்குழு உறுப்பினர்கள் அனைவரின் உடனிருப்பு தேவை எனவும், குறிப்பிட்டார்கள். நன்றியுரை, இறுதி ஆசீர் செபத்துடனும் கூட்டம் நிறைவு பெற்றது.

# குருக்களின் தியானம் மற்றும் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்

மார்த்தாண்டம் மறைமாவட்ட குருக்களுக்கான டிசம்பர் மாதத்திற்கான தியானம் ஆயர் இல்லத்தில் வைத்து 09.12.2026 அன்று நடைபெற்றது. இதில் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து அருட்தந்தையர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மாதாந்திர தியானத்தைத் தொடர்ந்து மறைமாவட்ட அருட்தந்தையர்கள் மற்றும் ஆயர் அவர்கள் இணைந்து கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாடினார்கள். இக்கொண்டாட்டத்தில் மேதகு ஆயர் அவர்கள் கிறிஸ்து பிறப்பு செய்தியை வழங்கினார்கள். அருட்தந்தையர்கள் இணைந்து கிறிஸ்து பிறப்பு பாடலை பாடி கிறிஸ்துமஸ் கேக் வெட்டி, சிறப்பு பரிசும் வழங்கப்பட்டது.

# உபதேசிமார்களுக்கான கூடுகை

கிறிஸ்து பிறப்பு திருநாளை முன்னிட்டு மறைமாவட்டத்திலுள்ள அனைத்து பங்குகளிலுமுள்ள உபதேசிமார்களுக்கான கூடுகையானது மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகையின் தலைமையில் டிசம்பர் மாதம் 21-ஆம் தேதி ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இந்நிகழ்வில் மேதகு ஆயர் அவர்கள் கிறிஸ்து பிறப்பு செய்தியை வழங்கினார். இறுதியில் அனைத்து உபதேசியார்களுக்கும் கிறிஸ்துமஸ் பரிசுகள் வழங்கப்பட்டன.



# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## தளிர்கள் உலகம் – கிறிஸ்மஸ் விழா

தளிர்கள் உலக பயனாளிகளுக்கான கிறிஸ்மஸ் தின விழாவானது 06.12.2024 அன்று மிட்ஸ் கலை அரங்கில் வைத்து நடத்தப்பட்டது. மறைமாவட்ட முதன்மை குரு மோண். ஜோஸ் பிறைட் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம், ஆசிரியை அனிதா, ஆசிரியர் ரகுலால், திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப், திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. வினிதா ராணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாணவன் அஜய் விருந்தினர்கள் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்றார். மோண். ஜோஸ் பிறைட் அவர்கள் கிறிஸ்மஸ் செய்தி அளித்து மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்து வழங்கியதுடன் மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை வழங்கும் நிகழ்வினையும் துவங்கி வைத்தார்கள். மாணவி செலின் மேரி கிறிஸ்மஸ் செய்தி அளித்தார்கள். பின்னர் திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப், ஆசிரியை அனிதா ஆகியோர் கிறிஸ்மஸ் வாழ்த்துரை வழங்கினார்கள். தொடர்ந்து மோண். ஜோஸ் பிறைட் அவர்கள் கிறிஸ்மஸ் கேக் வெட்டி அனைவருக்கும் பகிர்ந்தார்கள். பின்னர் குழந்தைகள் தின விழாவின் போது நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும் ஒழுங்காக வகுப்புகளில் கலந்து கொண்ட தாய்மார்களுக்கும், மற்றும் அனைத்து மாணவர்களுக்கும் கிறிஸ்மஸ் பரிசுகள் வழங்கப்பட்டன. இடையிடையே மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தொடர்ந்து 185 மாணவ மாணவிகளுக்கு ரூபாய் 1,85,000/- கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. இவ்விழாவில் 185 தாய்மார்களும், 112 மாணவர்களும் கலந்து கொண்டனர்.

## நிறைவாழ்வு சங்கம் – கிறிஸ்மஸ் விழா

மிட்ஸ் சமூகப்பணி மையத்தில் 513 சுய உதவி குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இந்த சுய உதவி குழுக்களுக்கான வருடாந்திர கூடுகை மற்றும் கிறிஸ்மஸ் விழாவானது 16.12.2025 அன்று காலை 10 மணிக்கு மிட்ஸ் கலை அரங்கில் வைத்து நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் விளவங்கோடு சட்டமன்ற தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திருமதி தாரகை கத்பர்ட், கன்னியாகுமரி மாவட்ட குற்ற வழக்குத் தொடர் துறை உதவி இயக்குநர் திருமதி ஜெப ஜீவா, மறைமாவட்ட முதன்மை குரு மோண். ஜோஸ் பிறைட், பெடரல் வங்கியின் திருவனந்தபுரம் மண்டல துணை தலைவர் திருமதி ரேஷ்மி ஓமனகுட்டன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். விழாவிற்கு வருகை தந்த விருந்தினர்களை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் இன்முகத்துடன் வரவேற்றார்கள். மிட்ஸ் திட்ட அலுவலர் திரு.ஷாஜன் ஜோசப் அவர்கள் மிட்ஸில் செயல்படும் திட்டங்கள், அவற்றால் மக்கள் பெற்று வரும் நன்மைகள் குறித்து விளக்கினார்கள். தொடர்ந்து, பேசிய கன்னியாகுமரி மாவட்ட குற்ற வழக்கு தொடர் துறை உதவி இயக்குநர் திருமதி ஜெப ஜீவா அவர்கள், பெண்கள் தங்களது மதிப்பு மிக்க நேரத்தை தொழில் செய்வதில் செலவிட்டு முன்னேற வேண்டும் என்றும், சமூக அக்கறையோடும், விழிப்புணர்வோடும், உண்மையாகவும், நேர்த்தியாகவும் செயல்பட வேண்டும் என்றும் வாழ்த்தினார்கள். பின்னர் பேசிய விளவங்கோடு சட்டமன்ற தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திருமதி தாரகை கத்பர்ட் அவர்கள் பெண்களின் மகத்துவம் மற்றும் சங்ககாலம் முதல் இன்றைய காலம் வரை பெண்கள் செய்து வரும் தியாகங்கள் குறித்து பல கருத்துகளை கூறி பெண்கள் மேலும் சமூகத்தில் உயர வேண்டும் என்று வாழ்த்தினார்கள். மேலும் மறைமாவட்ட



முதன்மை குரு மோண். ஜோஸ் பிறைட் அடிகளார், திருமதி ரேஷ்மி ஓமனகுட்டன் ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினார்கள். பின்னர் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் கிறிஸ்மஸ் கேக் வெட்டி கிறிஸ்மஸ் தின செய்தியளித்து அனைவரையும் வாழ்த்தினார்கள். தொடர்ந்து, விவசாயிகளை தொழில் முனைவோராக்கும் அரிய முயற்சியாக, எளிய அடித்தட்டு மக்கள் தங்களது தொழில் முனைப்புகளை கூட்டாக மேற்கொண்டு, தங்களை மேம்படுத்தி கொள்ளும் வாய்ப்புகளை உருவாக்கித் தர ஊக்குவிக்கும் MOM (Marthandam Opportunity Makers) என்ற நிறுவனத்தை விழாமேடையில் மேதகு ஆயர் அவர்கள் துவங்கி வைத்தார்கள். MOM நிறுவனத்தின் செயல்பாடுகள், முக்கியத்துவம் தற்போது இந்த நிறுவனத்தின் வழியாக செயல்படுத்தப்படும் தேன் உற்பத்தி மற்றும் அதன் பயன்கள் குறித்து பேரருட்தந்தை பிராங்கிளின் அவர்கள் விளக்கி கூறினார்கள். மேலும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற கிளஸ்டர் பொறுப்பாளர்கள் மற்றும் சிறப்பாக செயல்பட்டு வரும் சுயஉதவிகுழு பொறுப்பாளர்களுக்கும் ஆயர் அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவின் இடையே சுய உதவி குழு பொறுப்பாளர்களின் கண்கவர் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இறுதியில் தேசிய கீதத்துடன் விழாவானது இனிதே நிறைவு பெற்றது. இந்த விழாவில் மிட்ஸ் மண்டல இயக்குநர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் 450-க்கும் மேற்பட்ட சுய உதவி குழு பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

### உதவித்திட்டங்கள்

1. 26.11.2025 அன்று மார்த்தாண்டம் பணிமண்டலத்தின் கீழ் செயல்படும் 15 சுய உதவிகுழுக்களில் உள்ள 60 உறுப்பினர்களுக்கு ரூபாய் 30,00,000/- கடன் உதவி வழங்கப்பட்டது.

## பிற நிகழ்வுகள்

1. 27.011.2025 அன்று எழுவோம் இயக்கம் சார்பாக மிட்ஸ் மற்றும் நாகர்கோவில் கிம்ஸ் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச பொது மருத்துவம் மற்றும் புற்றுநோய் கண்டறிதல் முகாம் நடைக்காவு பகுதியில் வைத்து நடைபெற்றது. இந்த முகாமில் அந்த பகுதியை சேர்ந்த 47 நபர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

2. 30.11.2025 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தின் சார்பாக நடத்தப்பட்டு வரும் மாதாந்திர அறிவுத்திறன் தேர்வு மிட்ஸ் அலுவலகம், தேமானூர், மரியகிரி, நாகர்கோவில் ஆகிய மையங்களில் வைத்து நடைபெற்றது. இந்த தேர்வில் மொத்தம் 98 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு தேர்வு எழுதினர்.

3. 10.01.2026 அன்று தளிர்கள் உலகம் திட்ட பயனாளிகளுக்கான மாதாந்திர சிறப்பு வகுப்புகள் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டன. தாய்மார்களுக்கு செல்வி தாரணி அவர்களால் பண மேலாண்மை குறித்த பயிற்சி நடத்தப்பட்டது. இந்த நிகழ்வுகளில் 37 மாணவர்களும் 19 தாய்மார்களும் கலந்து கொண்டனர்.

4. 12.01.2026 மற்றும் 13.01.2026 ஆகிய இரு தினங்கள் விண்ணைத் தொடு திட்டத்தின் காலாண்டு ஆய்வு கூட்டம் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தை CRS பணியாளர்களான செல்வி சஞ்சனா மற்றும் திருமதி ரம்யா ரஞ்சன் மிஸ்ரா ஆகியோர் வழிநடத்தினர். இந்த கூட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தின் நான்கு மறைமாவட்டங்களிலும் உள்ள 26 விண்ணைத்தொடு திட்ட பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

5. 28.12.2025 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தின் சார்பாக நடத்தப்பட்டு வரும் மாதாந்திர அறிவுத்திறன் தேர்வு மிட்ஸ் அலுவலகம், தேமானூர், மரியகிரி, நாகர்கோவில் ஆகிய மையங்களில் வைத்து நடைபெற்றது. இந்த தேர்வில் மொத்தம் 68 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு தேர்வு எழுதினர்.



# MCA
## Diocese of Marthandam

### மலங்கரை கத்தோலிக்க இயக்கம் சபையளவிலான மறைபரப்புத்தள சந்திப்பு :

சபையளவிலான மலங்கரை கத்தோலிக்க இயக்கத்தின் சார்பில் ஆண்டுதோறும் நடைபெறும். மறைபரப்புத்தள சந்திப்பு இவ்வாண்டு நவம்பர் மாதம் 25-ம் தியதி முதல் டிசம்பர் 3-ம் தேதி வரையில் திருவனந்தபுரத்திலிந்து புறப்பட்டு, 27.11.2025 முதல் 30.11.2025 முடிய நான்கு நாள்கள் டெல்லி மற்றும் பஞ்சாப் மாநிங்களில் உள்ள மலங்கரை சபை சார்ந்த மறைபரப்பு தளங்கள் பார்வையிடப்பட்டு, அவர்களின் வாழ்க்கை தரம், கலாச்சாரம், ஆன்மீக நிலைகளை புரிந்து கொண்டு அவர்களுக்கு உதவிகளும் செய்யப்பட்டது. பஞ்சபி மொழியால் மலங்கரை திருப்பலியில் கலந்து கொண்டது மிக சிறப்பாக இருந்தது. 33 பேர் கலந்து கொண்டனர். நமது மறைமாவட்டத்திலிருந்து MCA தலைவர் திரு. Y. வர்க்கீஸ் கலந்துகொண்டு மறைமாவட்டம் சார்பில் நிதியுதவியும் வழங்கினார்கள்.

### பொதுநிலையினர் பணிக்குழு (Laity Commission)

மார்த்தாண்டம் மறைமாவட்ட பொதுநிலையினர் பணிக் குழுவின் சார்பில், இந்திய ஆயர் பேரவையின் அழைப்பிற்கிணங்க 07.12.2025 அன்று குழித்துறை மார் ஈவானியோஸ் பள்ளி வளாகத்தில் வைத்து அனைத்து பொதுநிலையினரையும் இணைத்து ஆன்மீக விழுமியங்கள் மற்றும் அரசியலமைப்பு, விழுமியங்கள் என்ற தலைப்பில் சிறப்பு கருத்தரங்கு நடைபெற்றது.

இந்த சிறப்பு கருத்தரங்கை இந்திய ஆயர் பேரவையின் நீதி, அமைதி மற்றும் வளர்ச்சிக் குழுமத்தின் தேசிய செயலாளர் அருட்தந்தை MC. ராஜன் அவர்கள் வழி நடத்தினார்கள்.. கருத்தரங்கின் முடிவில் ஐந்து தலைப்புகளில் ஐந்து குழுக்காக விவாதித்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, தொகுத்து வழங்கப்பட்டது.

முன்னதாக இயக்குநர் அருட்தந்தை அர்னால்டு டயஸ் அனைவரையும் வரவேற்க குருகுலமுதல்வர் ஜோஸ் பிறைட் தலைமையேற்று வாழ்த்துரையும், இறுதியாய் பொதுநிலையினர் பணிக்குழு செயலர் திரு. Y. வர்க்கீஸ் அனைவருக்கும் நன்றி கூற சுமார் 5.25 மணிக்கு நிறைவுற்றது.

## புனித வின்சென்ட் தே பவுல் சபை

மார்த்தாண்டம் மத்திய பேரவையினுடைய 26 -ஆவது ஆண்டு விழா 28.12.2025 ஞாயிறு மதியம் 2 மணிக்கு குழித்துறை தேவமாதா ஆலயத்தில் வைத்து சிறப்பாக நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மார்த்தாண்டம் மறை மாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையேற்றார்கள். மத்திய பேரவை தலைவர் சகோதரர் இயேசு ராஜன் அனைவரையும் வரவேற்றார்கள். தொடர்ந்து ஆண்டு விழா மலர் ஆயர் அவர்களால் வெளியிடப்பட்டு தக்கலை மத்திய பேரவை தலைவர் சகோதரர் ராபி அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். செயலர் சகோதரர் வர்கீஸ் அவர்கள் ஆண்டறிக்கை சமர்ப்பித்தார்கள். பொருளாளர் சகோதரர் ஜஸ்டின் ராஜன் வரவு செலவு கணக்கு சமர்ப்பித்தார்கள். மேதகு ஆயர் அவர்கள்ர ஆசியுரை வழங்கினார்கள். சகோதரர் ராபி அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். இந்தக் கூட்டத்தில் 21 நபர்களுக்கு கல்வி மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டன. மேலும் 21 நபர்களுக்கு ஜூப்பிலி கடன் உதவி வழங்கப்பட்டது. பனிச்சமூடு மற்றும் கீழ்மாங்கோடு கிளைச் சபைகளுக்கு சுழற்சிமுறை திட்டம் வழங்கப்பட்டது. அருட்தந்தை கெவின் மற்றும் அருட்தந்தை பிபின் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இந்தக் கூட்டத்தில் வின்செந்திய சகோதர சகோதரிகள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். ஆண்டு விழாவுக்கான ஏற்பாடுகளை மார்த்தாண்டம் வட்டார சபையும் அதுபோல குழித்துறை கிளை சபையும் இணைந்து செய்தார்கள். இறுதியில் அருட்தந்தை விபின் அவர்களால் நற்கருணை ஆராதனை மற்றும் ஆசீர் வழங்கப்பட்டது. அருட்தந்தை பிவின் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூற இறுதி ஜெபத்துடன் கூட்டம் நிறைவடைந்தது. கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் தேநீர் குழித்துறை பங்கு மக்களால் வழங்கப்பட்டது.



### மார்த்தாண்டம் மத்திய சபை

மேக்கோடு புனித வின்சென்டி பால் சங்கத்தின் சார்பில் கிறிஸ்துமஸ் நல உதவிகள் வழங்கப்பட்டது. கூட்டத்திற்கு பங்கு தந்தை அருட்தந்தை ஜெஸ்டின் அடிகளார் தலைமை தாங்கினார். மத்திய சபை பொருளாளர் திரு. ஜெஸ்டின், மரியகிரி வட்டார சபை செயலாளர் திரு. பிரின்ஸ் ஆகியோர் முன்னிலையில் அரிசி, சேலை மற்றும் காய்கறிகள் வழங்கப்பட்டது. சங்க தலைவர் P. சலீம், செயலாளர் ஜெனட் மேரி, பொருளாளர் டிசோசா சுஜின், உதவி தலைவர் தேவதாசன், கௌரவ தலைவர் திரு. இராஜேந்திர பாபு, செல்வராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### குலசேகரம் வட்டார சபை

கிறிஸ்துமஸ் தினத்தை முன்னிட்டு ஏழை முதியோர்களுக்கு உணவு பொருட்கள் வழங்கும் நிகழ்வானது செருப்பாலூர் புனித இயேசு மரி திருஇருதய ஆலயத்தில் வைத்து 21-12-2025 ஞாயிறு மதியம் 2.30 மணிக்கு மார்த்தாண்டம் மறைமாவட்ட மேதகு ஆயர் Dr. வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையில் குலசேகரம் வட்டாரசபை ஆன்மீக இயக்குனர் பேரருள்தந்தை அருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் மற்றும் வட்டார சபை தலைவர் Bro.லெனின் சேவியர் முன்னிலையில் நடைப்பெற்றது. இந்நிகழ்வில் மறைவட்ட அருள்தந்தையர்கள் அருட்தந்தை பிபின், அருட்தந்தை சில்ஜின், அருட்தந்தை றோபின் மற்றும் மத்திய வின்சென்ட் தே பவுல் சபை தலைவர் Bro. ஏசுராஜன் வட்டார சபை செயலர் Bro. அருளப்பன், பொருளர் Bro. சில்வானஸ் மற்றும் வட்டார / கிளைசபை உறுப்பினர்கள் மற்றும் Rotary Club of Marthandam Honey City நண்பர்கள் Rtn. திருமலையாண்டி, Rtn. சிவகுமார், Rtn. சந்திரசேகர் ஆகியோரும் கலந்துகொண்டார்கள். இந்நிகழ்வில் 12 நபர்களுக்கு மருத்துவ படிப்பிற்கான உதவி, ஒரு முதியவருக்கு அரிசி, மசாலா பொருட்கள், பாயாசத்திற்குரிய பொருட்கள், தேங்காய், Cake என ₹ 1000 ரூபாய் மதிப்பில் 220 முதியோர்களுக்கு வழங்கப்பட்டது. கூடவே அனைத்து முதியோர்களுக்கும் தலா ஒரு கம்பிளியும் வழங்கப்பட்டது.

### திருமண ஆயத்தப்பயிற்சி

**2026 ஜனவரி** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் **16, 17** ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.



## மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி கிராத்தூர்

### HOM - சிறப்புப் பள்ளி மாணவர்களின் கிறிஸ்துமஸ் வாழ்த்துப்பாடல்

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டம் கல்வியியல் கல்லூரியில் 19-12-2025 அன்று குழித்துறையில் இயங்கிவரும் சிறப்புப் பள்ளி மாணவர்கள் கிறிஸ்து பிறப்பு செய்தியினை அறிவிக்கும் பொருட்டு கிறிஸ்துமஸ் வாழ்த்துப் பாடலை பாடி மகிழ்வித்தனர். எங்கள் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் மற்றும் கல்லூரி நிர்வாகமும் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்தனர்.

### கிறிஸ்துமஸ்விழா

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டம் கல்வியியல் கல்லூரியில் 19-12-2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டு கிறிஸ்துமஸ் கலைவிழா போட்டிகள் நடைபெற்றது. 22-12-2025 அன்று இவ்விழாவானது சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவானது காலை 10.00 மணியளவில் கிறிஸ்துமஸ் விழா பொதுக்கூட்டமானது இறை வணக்கப்பாடலுடன் ஆரம்பமானது. தாளாளர் அருட்தந்தை பென்னார்டு கிறிஸ்து பிறப்பு விழா பற்றிய சிறப்புரையாற்றினார். மேலும் போட்டிகளில் பங்கேற்று வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். இவ்விழாவானது மதியம் 2.00 மணியளவில் நிறைவுபெற்றது.

# மறைவட்ட செய்திகள்

## களியக்காவிளை மறைவட்டம்

❖ டிசம்பர் மாதம் 21-ம் தேதி மரியகிரி பங்கில் வைத்து களியக்காவிளை மறைவட்ட ஆசிரியர்களுக்கான கிறிஸ்துமஸ் கிறிஸ்து பிறப்பு பாடல் போட்டி நடைபெற்றது. இந்நிகழ்விற்கு மறைவட்ட முதன்மைகுரு அருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் தலைமை தாங்கினார்கள். மறைவட்ட மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை ஜோஸ் G. அவர்கள் வழி நடத்தி சென்றார்கள். அனைத்து பங்குகளிலிருந்தும் மறைக்கல்வி ஆசிரியர்கள் பங்கு பெற்றனர். இப்போட்டியில் நடைக்காவு பங்கு முதலிடத்தை தட்டி சென்றது.

❖ டிசம்பர் மாதம் 22-ம் தேதி மரியகிரி பங்கில் வைத்து மறைவட்டத்திலுள்ள குருக்கள் மற்றும் துறவிகளுக்கான கிறிஸ்துமஸ் கூடுகையானது நடைபெற்றது. இக்கூடுகையில் அருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் தலைமை தாங்க, அருட்சகோதரி ஷெறின் அவர்களும், அருட்தந்தை ஜோஸ் G. அவர்களும் கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினார்கள்.

## கொல்லங்கோடு மறைவட்டம்

❖ கொல்லங்கோடு மறைவட்ட எம்சிஏ சார்பாக கிறிஸ்துமஸ் விழா 21-12-2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 4:30 மணிக்கு பின்குளம் தூய மரியன்னை ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் தலைமை தாங்கினார்கள். மார்த்தாண்டம் மறைமாவட்ட எம்.சி.ஏ தலைவர், திரு. வர்கீஸ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்கள். மேலும் இவ்விழாவில் கிறிஸ்துமஸ் கரோல் போட்டி மற்றும் ஏழைகளுக்கு நலத்திட்டம் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது. மறைபரப்பு தளங்களான நல்லநாதபுரம் மற்றும் ஜே.ஜே நகர் உட்பட 150 ஏழைகளுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. கொல்லங்கோடு மறைவட்ட எம்.சி.ஏ பொறுப்பாளர்கள் விழாவினை சீரும் சிறப்புமாக வழிநடத்தினார்கள். இந்நிகழ்வில் கொல்லங்கோடு மறைவட்ட எம்சிஏ



இயக்குனர் அருட்தந்தை ஷிஜு ஜோஸ் அடிகளார் மற்றும் பின்குளம் பங்குத்தந்தை அருட்தந்தை ஸ்டீபன் மாத்தார் அவர்களும் கலந்துகொண்டு கிறிஸ்மஸ் வாழ்த்து செய்திகள் வழங்கினார்கள்.

## பனச்சமூடு மறைவட்டம்

❖ பனச்சமூடு மறைவட்டத்தில் கிறிஸ்துமஸ் விழாவானது 14.12.2024 அன்று மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அனைத்து பக்த இயக்கங்களும் இணைந்து இவ்விழாவினை கொண்டாடினர். குறிப்பாக பாலர் சபை பிள்ளைகளுக்கான நடனப் போட்டியும் நடைபெற்றது. அதன்பிறகு நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவிற்கு மறைவட்ட முதன்மைகுரு கோர்எபிஸ்கோப்ப எஸ். வர்கீஸ் அடிகளார் அவர்கள் கிறிஸ்து பிறப்புச் செய்தியை வழங்கினார் கொண்டத்திற்கு தலைமை தாங்கினார். அனைத்து பங்குகளில் இருந்தும் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருந்தன. MCYM சார்பாக மறைவட்ட அளவில் நடைபெற்ற போட்டிகளுக்கான பரிசுகளும் அன்று வழங்கப்பட்டன.

## குலசேகரம் மறைவட்டம்

❖ குலசேகரம் மறைவட்டம் சார்பாக நடத்தப்பட்ட பாலர்சபை மழலைகளுக்கான கிறிஸ்துமஸ் போட்டிகள் அணக்கரை பங்கில் வைத்து 27-ம் தேதி நடத்தப்பட்டன. எல்லா பங்குகளில் இருந்தும் பாலர்சபை மழலைகள் ஆர்வத்தோடு கலந்து கொண்டனர்.

## அழகியமண்டம் மறைவட்டம்

❖ டிசம்பர் மாதம் 27-ஆம் தேதி அன்று செல்லங்கோணம் பள்ளிக்கூடத்தில் வைத்து பாலர் சபை பிள்ளைகளுக்கான மறைவட்ட அளவிலான போட்டிகள் மற்றும் கிறிஸ்துமஸ் விழா நடைபெற்றது.

## நாகர்கோவில் மறைவட்டம்

❖ புனித வின்சென்ட் டி பவுல் நாகர்கோவில் வட்டார சபை சார்பாக கிறிஸ்துமஸ் விழா பெருவிளை திருத்தலத்தில் வைத்து திருத்தல அதிபர் தலைமையில் நடைபெற்றது. மேலும் தத்து குடும்ப பயனாளிகளுக்கு கிறிஸ்துமஸ் பரிசு வழங்கப்பட்டு கூடுகை இனிதே நிறைவடைந்தது.


# பெயர்விழா நல்வாழ்த்துகள்


அருட்தந்தை இயேசுதாஸ்
ஜனவரி 06


அருட்தந்தை ஸ்டீபன் மாத்தார்
ஜனவரி 08


அருட்தந்தை ஸ்டீபன் பாலவிளை
ஜனவரி 08


அருட்தந்தை ஸ்டீபன் ஜாண்
ஜனவரி 08


அருட்தந்தை தேவதாஸ்
ஜனவரி 14


அருட்தந்தை அர்னால்டு டயஸ்
ஜனவரி 15


அருட்தந்தை சிபி
ஜனவரி 20


அருட்தந்தை பாபுராஜ்
ஜனவரி 31



# ஆயரின் டிசம்பர் மாத நிகழ்வுகள்



1 ➢ பாலவிளை ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறைமக்களை ஆசீர்வதித்தார்.

5 ➢ தக்கலையில் வைத்து நடைபெற்ற கிறிஸ்தவர் ஐக்கியப் பேரவை கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

15 ➢ புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தென்னிந்தியத் திருச்சபை குமரி மாவட்ட ஆயரை சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

9 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்டக் குருக்களின் கிறிஸ்துமஸ் கூடுகையில் கலந்து கொண்டு அருளுரையாற்றினார்.

13 ➢ நெய்வேலி மக்களின் கிறிஸ்துமஸ் விழா கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு ஆசியுரையாற்றினார்.

16 ➢ குழித்துறை மறைமாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஆயர் இல்லத்திறப்பு விழாவில் கலந்து கொண்டார்.

16 ➢ MIDS -சுய உதவிக் குழுக்கள் ஆண்டு விழாவில் கலந்து கொண்டு ஆசீர்வதித்தார்.

19 ➢ ஆயர் இல்லத்தில் கிறிஸ்துமஸ் விழாவில் கலந்து கொண்டு ஆசீர்வதித்தார்.

20 ➢ MIDS கிறிஸ்துமஸ் விழா கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்.

20 ➢ கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கம் சார்பாக நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் கலந்து கொண்டார்.

21 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற உபதேசியார் கூடுகையில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினார்.

21 ➢ குலசேகரம் வட்டார வின்சென்ட் தே பவுல் சபை நடத்திய ஏழை முதியோர்களுக்கு கிறிஸ்துமஸ் தின உணவு பொருட்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு ஆசீர்வதித்தார்.

21 ➢ கொல்லங்கோடு மறைவட்ட MCA கிறிஸ்துமஸ் விழாவில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்.

22 ➢ குமரிமாவட்ட கிறிஸ்தவர் ஐக்கியப் பேரவை சார்பாக நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவிற்கு தலைமை தாங்கினார்.

22 ➢ மார்த்தாண்டம் ஐக்கிய கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்திற்கு தலைமை தாங்கி உதவிகளை வழங்கினார்.

22 ➢ இலவுவிளை புனித எப்ரேம் இளங்குருமட கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு ஆசீர்வதித்தார்.

23 ➢ திருவனந்தபுரம் சர்வோதயா CBSE பள்ளிக்கூட கிறிஸ்துமஸ் விழாவிற்கு தலைமை தாங்கி ஆசியுரை வழங்கினார்.

24 ➢ அடைக்காகுழி ஆலயத்தில் கிறிதுமஸ் திருச்சடங்குகளை நிறைவேற்றி திருப்பலி ஒப்புக் கொடுத்து இறையாசீர் வழங்கினார்.

27 ➢ மேய்ப்புப் பணி அறிவுரைக் குழு கூடுகைக்கு தலைமை தாங்கினார்.

28 ➢ கண்ணக்கோடு ஆலயத்தில் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுத்து புதுநன்மை வழங்கி ஆசீர்வதித்தார்.

28 ➢ வின்சென் தே பவுல் ஆண்டு விழாவிற்கு தலைமை தாங்கினார்.

28 ➢ Marthandam Medical Mission சார்பாக நடைபெற்ற மருத்துவர்கள் கூடுகையில் கலந்து கொண்டு ஆசீர்வதித்தார்.

28 ➢ ஆழ்வார்க்கோயில் ஆலய ஜூபிலி தினவிழாவை ஆரம்பித்து வைத்து திருப்பலி நிறைவேற்றி ஆசீர்வதித்தார்.




# இம்மாதம் நினைவு கூர


ஜனவரி 2026

1 – நம் ஆண்டவரின் பெயரிடல்
ஆங்கிலப் புத்தாண்டு தினம்
மார் பசேலியோஸ், மார் கிரிகோரியோஸ்
மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்
காதோலிக்கா ஆண்டகையின் பெயர்விழா
2 – மார் மக்காறியோஸ் ஈஹீதோயோ
3 – இறைவாக்கினர் மலாக்கி
புனித சாவற குரியாக்கோஸ் ஏலியாஸ்
4 – யல்தாவுக்குபின் இரண்டாம் ஞாயிறு
அமெரிக்கா – கானடா மறைமாவட்ட உதயம்
6 – தனஹா (நம் ஆண்டவரின் திருமுழுக்குத் திருநாள்)
7 – திருமுழுக்கு யோவானின் புகழ்ச்சி
புனித ஜூலியன்
8 – இரத்தசாட்சியாகிய புனித ஸ்தேவான்
பிலிப்போஸ் மார் ஸ்தேபானோஸ் ஆண்டகையின் பெயர்விழா
11 – தனஹாவுக்குப்பின் முதல் ஞாயிறு
யூஹானோன் மார் தியடோஷியஸ் ஆண்டகையின் பெயர்விழா
14 – சீனாய் மலையின் 40 இரத்த சாட்சிகள் / புனித தேவசகாயம்
15 – விதைகளை முன்னிட்டு தூய இறையன்னையின் நினைவு
16 – கீவர்கீஸ் மார் திவன்னாசியோஸ் ஆண்டகையின் நினைவு
17 – எகிப்தின் மார் அந்தோணியார்
தோமஸ் மார் அந்தோணியோஸ் ஆண்டகையின் பெயர்விழா
18 – தனஹாவுக்குப்பின் இரண்டாம் ஞாயிறு
மோறோன் மோர் சிறில் பசேலியோஸ் காதோலிக்கோஸ் பாவா
மற்றும் ஜோசப் மார் சேவேறியோஸ் ஆண்டகைகளின் நினைவு
அலெக்ஸாண்டிரியாவின் மார் கூறிலோஸ், மார் அத்தனாசியோஸ்
திருச்சபையின் ஒன்றிப்பு வார மன்றாட்டு ஆரம்பம்
19 – கீவர்கீஸ் மார் மக்காறியோஸ் ஆண்டகையின் பெயர்விழா
20 – புனித செபஸ்தியார்
21 – புனித ஆக்னஸ்
22 – புனித திமோத்தியோஸ்
24 – புனித பிரான்சிஸ் சாலஸ்
25 – தனஹாவுக்குப்பின் மூன்றாம் ஞாயிறு
புனித பவுலின் மனமாற்றம்
திருச்சபையின் ஒன்றிப்பு வார மன்றாட்டு நிறைவு
26 – இந்திய குடியரசு தினம்
28 – புனித தோமஸ் அக்குவினாஸ்
29 – மார் இக்னாத்தியோஸ், யோசுவா மார் இக்னாத்தியோஸ்
ஆண்டகையின் பெயர்விழா
31 – புனித தோன் போஸ்கோ

1

3

6

26

31


## மேய்ப்புப்பணி அறிவுரைக்குழு கூடுகை



## உபதேசிமார்களுக்கான கூடுகை



## MIDS




## புனித வின்சென்ட் தே பவுல் இயக்கம்



## மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி, கிராத்தூர்



## MCA



## மறைவட்ட செய்திகள்



குலசேகரம்



அழகியமண்டபம்



நாகர்கோவில்